ந.க.எண்.11521/2007/ஆ4

பேரூராட்சிகளின் ஆணையரகம்,
குறளகம், சென்னை 108.

நாள். 23.7.2008

**சுற்றறிக்கை**

பொருள் – திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் – பேரூராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் நெறிமுறைபடுத்துவதற்காக வழங்கப்பட்ட முக்கிய 10 அம்ச வழிமுறைகள் – அறிவுரை வழங்கப்பட்டது செயல்படுத்தப்படாமல் உள்ளது – உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது–தொடர்பாக

பார்வை – இவ்வாணையரக சுற்றறிக்கை ந.க.11521/07/ஆ4 நாள்.5.7.2008

பேரூராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்துவது தொடர்பாக விரிவான பல்வேறு அறிவுரைகள் அவ்வப்போது பேரூராட்சிகளின் ஆணையரால் வழங்கப்பட்டுள்ளன. மேலும், பார்வையில் காணும் சுற்றறிக்கையில் பேரூராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினை நெறிபடுத்த செயல் அலுவலர்கள் பின்பற்றப்பட வேண்டிய முக்கிய 10 அம்ச வழிமுறைகள் அனைத்து மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள் மற்றும் உதவி செயற் பொறியாளர்களுக்கு SMS மூலம் மற்றும் மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டன. இத்தகவல்களை அனைத்து பேரூராட்சி செயல் அலுவலர்களுக்கு அனுப்பி வைத்து அவற்றை உடனடியாக செயல்படுத்தவும், எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையினை உதவி இயக்குநர்கள் பேரூராட்சிகளின் ஆணையருக்கு அனுப்பி வைக்கவும் அறிவுறுத்தப்பட்டது.

பேரூராட்சிகளின் ஆணையர் வழங்கிய இவ்வறிவுரைகள் பல இடங்களில் இதுவரை செயல்படுத்தப்படாமல் உள்ளதாக ஆணையரின் கவனத்திற்கு வந்துள்ளது. உதவி இயக்குநர்கள், உதவி செயற் பொறியாளர்கள் மற்றும் செயல் அலுவலர்கள் இப்பொருள் தொடர்பாக வழங்கப்பட்ட அறிவுரைகளை பின்பற்றி நடவடிக்கை எடுக்காமல் உள்ளது மிகவும் கண்டிக்கத்தக்கது. இதனை சிறப்பினமாகக் கருதி, அனைத்து பேரூராட்சி செயல் அலுவலர்களும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினை நெறிபடுத்த வழங்கப்பட்ட முக்கிய 10 அம்ச வழிமுறைகளை, தத்தம் பேரூராட்சிகளில் 15தினங்களுக்குள் கண்டிப்பாக செயல்படுத்த அறிவுரை வழங்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தமது கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து பேரூராட்சிகளிலும், மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை உறுதி செய்யவும், எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த தொகுப்பறிக்கையினை புகைப்படங்களுடன் 15 தினங்களுக்குள் பேரூராட்சிகளின் ஆணையருக்கு நேர்முகக் கடிதம் வாயிலாக அறிக்கை சமர்ப்பிக்கவும் அறிவுறுத்தப்படுகிறது. மேற்படி அறிவுரைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளத் தவறும் செயல் அலுவலர்கள் மீதும் உரிய ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் உதவி இயக்குநர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**ஒம்/– கே.கோபால்**
ஆணையர்

பெறுநர்

அனைத்து மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள்/
உதவி செயற் பொறியாளர்கள்
நகல்– அனைத்து பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள்.
(சம்மந்தப்பட்ட மண்டல உதவி இயக்குநர் அலுவலகம் வழி)